சார்பு நீதிமன்றம், பரமத்தி.
முன்னிலை : திரு.S.நளினகுமார், B.A., B.L.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06–ஆம் நாள் திங்கட்கிழமை

**மேல்முறையீட்டு வழக்கு எண். 23/2023 (CNR.No.TNNM100005482023)**

1. மல்லிகா
2. குப்புசாமி ... மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள்

/ எதிராக /

செல்லப்பன் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மேல்முறையீடானது பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அசல் வழக்கு எண்.111/2016 வழக்கு 17.06.2023–ஆம் தேதியன்று மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழங்கிய தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கீழமை நீதிமன்றத்தில் அசல் வழக்கு தரப்பினர்கள்

செல்லப்பன் ... வாதி

/ எதிராக /

1. மல்லிகா
2. குப்புசாமி ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடு என் முன்னர் 24.06.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. பி.சேகர் அவர்கள் ஆஜராகியும், 1, 2–எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர்.கோவிந்தராஜு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . . .

தீர்ப்புரை

மேல்முறையீட்டை அனுமதிக்கக்கோரியும், கடந்த 17.07.2023–ஆம் தேதி பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 111/2016–வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கவேண்டி, உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 96 உ/இ கட்டளை 41, விதி 1 சிபிசி–ன் கீழ் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. விசாரணை நீதிமன்றத்தில், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்.

i) தாவா சொத்தின் ச.எண்.176/1, 177/4C4, 177/4D. தாவா 1 லக்க சொத்துக்கள் வாதியின் தகப்பனார் குப்பண்ணகவுண்டருக்கும், வாதியின் தாயார் காளியம்மாளுக்கும் 15.04.1953 தேதியிட்ட கிரைய ஆவணப்படியும், மீத சொத்துக்கள் குப்பண்ணகவுண்டருக்கு 26.06.1957 தேதிய கிரைய ஆவணப்படிக்கும் பாத்தியப்பட்டது. மேற்படியார்கள் அவர்களுடைய ஒரே மகனான வாதியை வாரிசாக விட்டுவிட்டு. சுமார் 20 வருடங்களுக்கு முன்பு எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் இறந்துவிட்டார்கள். வாதி தாவா 1 லக்க சொத்தினை வாரிசு என்ற முறையில் அடைந்து, வேண்டிய மகசூல் வைத்து அனுபவித்து வருகிறார். வாதி பெயருக்கு தமிழக அரசால் கணினி பட்டா வழங்கப்பட்டுள்ளது. பிராதுடன் தோராய வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், வாதியின் தாவா 1 லக்க சொத்து P, பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.177/4C4–ல் உள்ள தாவா 2 லக்க சொத்தான 20 லிங்ஸ் அகல கிழமேல் பாதை பகுதி A B, பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களுக்கு பாத்தியப்பட்ட தாவா 3 லக்க சொத்தான ச.எண்.177/4D–ல் உள்ள 30 லிங்ஸ் அகல தென்வடல் பாதை பகுதி B C, மேற்படி சர்வே எண்களில் உள்ள 20 லிங்ஸ் அகல கிழமேல் பாதை பகுதி C D, B C D பாதை பகுதி நீங்கலாக ச.எண்.177/4D–ல் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து D, தாவா 2 லக்க சொத்தான A B பாதை பகுதிக்கு தென்புறம் உள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து D1, அதில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட குடியிருப்பு வீடு D

H, தாவா A B பாதையின் வடபுறம் உள்ள பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து D2, K.ராசாம்பாளையம் முதல் நாமக்கல் வரை செல்லும் தார்சாலையில் இருந்து கிழக்கு நோக்கி சென்று பின்பு தெற்கு நோக்கி செல்லும் புறம்போக்கு பாதை R S T என காட்டப்பட்டுள்ளது. தற்போது தாவா 2 லக்க A B பாதையைப் பொறுத்தும், தாவா 3 லக்க சொத்தான B C D பொறுத்தும் மட்டும் தாவா. தாவா 2, 3 லக்க சொத்து ஆதியில் பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தரான கணேசனுக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டு இருந்தது. மேற்படி சொத்து பாதை பகுதி. வாதியின் பெற்றோர் தாவா P சொத்தினை கிரையம் பெற்ற நாள் முதல் R S T பாதையின் வழியாக சென்று S T பாதையிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தருக்கு பாத்தியப்பட்ட தாவா 2 லக்க சொத்தான 20 லிங்ஸ் அகல A B பாதை வழியாகவும், B பாயிண்ட்டில் இருந்து தெற்கு நோக்கி C பாயிண்ட் வரை செல்லும் 30 லிங்ஸ் அகல பாதை வழியாகவும், பின்பு C பாயிண்ட்டில் இருந்து கிழக்கு நோக்கி D பாயிண்ட் வரை செல்லும் 20 லிங்ஸ் அகல பாதை வழியாகவும் ஆட்கள், கால்நடைகள், வண்டி, வாகனங்கள் எடுத்து சென்று அனுபவித்து வந்து சுமார் 25 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார்கள்.

ii) மேற்படியார்கள் இறந்ததற்கு பின்னிட்டு வாதி, பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தரிடம் தாவா 2, 3 லக்க சொத்தான A B C D பாதை பகுதியில் அதன் அடிநில உரிமையாளரான கணேசனிடம் ஈஸ்மெண்ட் பாதை பாத்தியத்தை குறிப்பிட்டு சக்குபந்தி, விஸ்தீரணம் குறிப்பிட்டு சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்றுள்ளார். வாதி R S T புறம்போக்கு பாதையில் இருந்து P சொத்துக்கு தாவா A B C D பாதை வழியாக 20.09.1990 தேதியிட்ட ஈஸ்மெண்ட் பாத்திய கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ஆட்கள், கால்நடைகள், வாகனம், வண்டிகள் எடுத்து சென்று அனுபவித்து வருகிறார். வாதிக்கு A B C D பாதையில் மேற்படி ஈஸ்மெண்ட் பாத்திய கிரைய ஆவணப்படி பாதை பாத்தியம் ஏற்பட்டுள்ளது. பின்னிட்டு பிரதிவாதிகள், வாதியின் முன்பாத்தியஸ்தர் வகையறா ஏற்படுத்தி கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் கணேசனின் வாரிசுகளிடமிருந்து தாவா B C D பாதை பகுதியில் அமைந்துள்ள ச.எண்.177/4D நிலத்தினை 24.03.1999 தேதியில் கிரையம் பெற்றுள்ளனர்.

iii) அந்த கிரைய ஆவணத்தில் தாவா சொத்து விபரத்தில் தாவா D சொத்தின் சக்குபந்தியாக தாவா B C D பாதையாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா B C D பாதை பகுதியில் முட்கள் முளைத்து போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. அதனால் வாதி கடந்த 05.09.2016 இருந்து தாவா A B C D பாதை வழியாக P சொத்திற்கு ஆட்கள், கால்நடைகள், வண்டி, வாகனாதிகள் முதலியவை எடுத்து செல்வதற்கு B C பாதையில் இடையூறாக உள்ள முட்களை சுத்தம் செய்துள்ளார். அதனை பிரதிவாதிகள் தடை செய்து தாவா A B C D பாதையில் வாதியின் பாத்தியத்தை மறுத்தளித்து வாதியின் P சொத்திற்கு ஆட்கள், கால்நடைகள், வண்டி, வாகனங்கள் எடுத்து சென்றதை தடை செய்ய முயன்றதை, வாதி பொது மனிதர் மூலம் தடை செய்து விட்டார். இருப்பினும் வாதி தாவா பாதையில் சென்று அனுபவித்து வருவதை தடை செய்தே தீரப்போவதாக பௌருசம் கூறி சென்றுள்ளார். எனவே தாவா P சொத்திற்கு ஆட்கள், கால்நடைகள், வண்டிகள், வாகனாதிகள் எடுத்து சென்று அனுபவித்து வர தாவா A B C D பாதை வழியாக வாதிக்கு பாதை பாத்தியம் உண்டு என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக வாதி தாவா P சொத்திற்கு தாவா A B C D பாதை வழியாக தாவா B C பாதையில் உள்ள முற்களை சுத்தம் செய்து ஆட்கள், கால்நடைகள், வண்டிகள், வாகனாதிகள் எடுத்து சென்று அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, மேற்படியார்களுடைய ஆட்களோ, எக்காலத்திலும், எவ்விதத்திலும் யாதொரு தடையோ, இடைஞ்சலோ ஆக்கிரமிப்போ செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணை கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

i) வழக்குரை சங்கதிகளும், பிராது பிளான் விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை. தாவா சொத்தின் பூஸ்திதியில் எவ்விதமான வண்டிப்பாதையும் இல்லை. தாவா பாதையானது எந்தக்காலத்திலும் இல்லை. வாதி அனுபவம் செய்யவும் இல்லை. வாதிக்கு இந்த பிரதிவாதிகளின் நிலத்தில் யாதொரு தடபாத்திய உரிமையோ, அனுபவமோ எக்காலத்திலும் இல்லை. பூமி அமைப்பில் தடம் இல்லாமல் கற்பனையாக வாதி தடம் உள்ளதாக குறிப்பிட்டு இந்த வழக்கில் விளம்புகை மற்றும் நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது சட்டப்படியும், பொருண்மைப்படியும், நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதியின் சொத்தில் வாதிக்கு யாதொரு தடபாத்திய உரிமையும் இல்லை. B C ஒழுங்கில் எவ்வித வண்டிப்பாதையும் இல்லை. அந்த பகுதியில் சுமார் 20 அடி உயரம் கொண்ட மிகப்பெரிய சீத்த கருவேல மரங்களும், வேப்பமரங்களும், ஊஞ்சை மரங்களும் உள்ளன. C D ஒழுங்கில் எவ்வித வண்டிப்பாதையும் இல்லை.

ii) வாதி தனது ஆவணத்தில் தடபாத்திய உரிமை கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருக்கும் சங்கதி பொய்யானது. அவ்வாறு எவ்விதமான பாதையும் அமைக்கப்படவில்லை. பூமி அமைப்பில் இருந்ததும் இல்லை. வாதி தன்னிடம் உள்ள பொய்யான ஆவணத்தை வைத்துக்கொண்டு பாத்தியமும், உரிமையும் இல்லாத பாதைக்கு தடையுத்தரவு பெற முயற்சிப்பது தவறானதாகும். 20.09.1990 தேதிய ஈஸ்மெண்ட் பாத்திய கிரைய பத்திரம் பொய்யானது. அது அமலுக்கு வராத ஆவணம். மேற்படி ஆவணத்தை இந்த பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர் எழுதிக்கொடுக்க வில்லை. கணேசன் என்பவருக்கு D பாக நிலத்தில் யாதொரு தனிப்பட்ட பாத்தியமோ, உரிமையோ இல்லை. 20.09.1990 தேதியில் மேற்படி சொத்தானது இந்த பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தருக்கும், அவரது குடும்பத்தினருக்கும், பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர் லட்சுமணகவுண்டர் குடும்பத்திற்கும் பாத்தியப்பட்ட பிரிவினை ஆகாத பொதுக்குடும்ப சொத்தாகும். பொதுக்குடும்ப சொத்தில் தன்னிச்சையாக ஒரு பாகஸ்தர் யாதொரு ஆவணமும் எழுதிக்கொடுக்க உரிமை இல்லை. தன்னிச்சையாக கணேசன் தடபாத்திய உரிமை எழுதிக்கொடுத்திருப்பது சட்டப்படி அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல. அந்த ஆவணத்தில் கண்டவாறு யாதொரு தடமும், பூமியில் அமைக்கப்படவில்லை. பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தரின் பாகப்பிரிவினை பத்திரத்தில், ச.எண்.178/6D இட்டேரி தடம் அகலம் குறைவாக இருந்ததால் தங்களுடைய தேவைக்காக இந்த D பாக நிலத்தில் 4 செண்ட் நிலம் பொதுவாக இந்த பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களான தியாகராஜனுக்கும், லட்சுமணன் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்ட கிழபுறம் உள்ள நிலத்திற்கு மட்டும் தடபாத்தியம் கண்டு எழுதப்பட்டுள்ளது.

iii) வாதிக்கு யாதொரு தடபாத்தியமும் இல்லை. பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டவாறு மேற்படி ஒழுங்கில் தடம் எதுவும் அமைக்கப்படவில்லை. வாதியின் நிலத்திற்கும், பிரதிவாதியின் நிலத்திற்கும் பாத்தியப்பட்ட வண்டிப்பாதையானது ச.எண்.178/6D–ல் வடபுற ஓரமாக கிழமேல் ஒழுங்கில் செல்கிறது. மேற்படி பாதை வழியாகத்தான் உபயவாதிகளும், அவர்களது முன்பாத்தியஸ்தர்களும் பிராது பிளானில் கண்ட R A T ஒழுங்கில் வந்து பின்பு கிழக்கு நோக்கி மேற்படி ச.எண்.178/6D–ல் வடபுற ஓரமாக கிழமேல் ஒழுங்கில் செல்லும் பாதையில் தான் வண்டி, வாகனதிகள் ஓட்டிச்சென்று அனுபவம் செய்து வந்தார்கள். தற்சமயம் ச.எண்.178/6D–ல் கிழபுற பகுதியில் பாதை இல்லை. வாதி P பாகத்திற்கு கிழக்கே இருந்து வரும் வண்டிப்பாதை வழியாகத்தான் சென்று வருகிறார். எனவே தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து, விசாரணை நீதிமன்றத்தால் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. B C, C D பாதை வழக்குரையில் சொல்லியுள்ளவாறு இருக்கிறதா?
2. A B C D பாதையைப் பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
3. வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
4. வேறு பரிகாரங்கள் என்ன?

5. விசாரணை நீதிமன்றத்தில், சாட்சிகளின் விசாரணையின்போது வாதி தரப்பில், வா.சா.1, 2, 3, 4–சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1–முதல் 10–வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், 1, 2–சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி..சா.ஆ.1–முதல் 7–வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற சான்றாவணமாக நீ.ம.சா.ஆ.1, 2–குறியீடு செய்யப்பட்டன.

6. மேல்முறையீட்டாளர்கள், விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒ.எஸ்.111/2016–வழக்கில் 1, 2 பிரதிவாதிகள். இம்மேல்முறையீட்டின் எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு விசாரணை நீதிமன்றத்தில், தாவா P சொத்திற்கு ஆட்கள், கால்நடைகள், வண்டிகள், வாகனாதிகள் எடுத்து சென்று அனுபவித்து வர தாவா A B C D பாதை வழியாக வாதிக்கு பாதை பாத்தியம் உண்டு என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக வாதி தாவா P சொத்திற்கு தாவா A B C D பாதை வழியாக தாவா B C பாதையில் உள்ள முற்களை சுத்தம் செய்து ஆட்கள், கால்நடைகள், வண்டிகள், வாகனாதிகள் எடுத்து சென்று அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, மேற்படியார்களுடைய ஆட்களோ, எக்காலத்திலும், எவ்விதத்திலும் யாதொரு தடையோ, இடைஞ்சலோ ஆக்கிரமிப்போ செய்யாமல் இருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணை கோரியும், தாவா செலவுத் தொகை கோரியும் வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கை அனுமதித்து தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. மேற்படி தீர்ப்பாணையில் குறையுற்ற 1, 2–பிரதிவாதிகளால் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இந்த மேல்முறையீட்டின் வசதிக்காக வழக்கு தரப்பினர்கள் ஒ.எஸ்.111/2016 வழக்கில் விவரிக்கப்பட்ட நிலையிலேயே குறிப்பிடப்படுகிறது.

8. <u>மேல்முறையீட்டுக்கான காரணங்களின் சுருக்கம்</u> :

1. வாதி தாவா A B C D பாதையை பொறுத்து ஏதோ 20.09.1990–ம் தேதியில் ஒரு கணேசன் என்பவர் எழுதிக்கொடுத்த ஈஸ்ட்மெண்ட் பாத்திய கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தனக்கு பாத்தியம் என்றும், அந்த தாவா ABCD பாதை என்பது தாவா பிராது பிளானில் காட்டியுள்ளவாறு பூமி அமைப்பில் உள்ளதாக குறிப்பிட்டு அதன் அடிப்படையில் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகள் தரப்பில் வாதி தாவாவில் கூறியுள்ள பாதையானது BCD ஒழுங்கில் பாதை இல்லை என்றும், அதுபோன்று குறிப்பிட்டுள்ள அளவுகளில் மேற்படி ஒழுங்கில் யாதொரு பாதையும் பூமி அமைப்பில் அமைக்கப்படவில்லை என்றும், மேற்படி

வாதி தரப்பில் குறிப்பிடுகின்ற வா.சா.ஆ–3 ஈஸ்ட்மெண்ட் பாத்திய பத்திரம் அமுலுக்கு வரவில்லை என்றும் மிகத் தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை.

2. வா.சா.ஆ–3 ஈஸ்ட்மெண்ட் பாத்திய பத்திரம் எழுதிக்கொடுக்க அந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்த கணேசன் என்பவருக்கு ச.எண்: 177/4D ல் யாதொரு தனிப்பட்ட பாத்திய உரிமையுமில்லை. அந்த சொத்தானது மேற்படி கணேசன் என்பவருக்கும், அவரது வாரிசுதாரர்களுக்கும் அதேபோல் மேற்படி கணேசனின் சித்தப்பா லட்சுமணகவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்ட பொது குடும்ப சொத்தாகும். இந்த சங்கதிகளை குறித்து இந்த மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் வாயிலாகவும், வாய்மொழி சாட்சியத்தின் மூலமாகவும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. இதை விசாரணை நீதிமன்றம் ஆராய தவறிவிட்டது.

3. வா.சா.ஆ 3 ஆவணம் ஏற்பட்ட பின்னர்தான் ச.எண்: 177/4D யை பொறுத்து அந்த கூட்டு குடும்ப பாகஸ்தர்களுக்கிடையே 26.12.1991–ல் பி.சா.ஆ–1 பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுகிறது. அந்த பி.சா.ஆ–1 ஆவணப்படி மேற்படி ச.எண்: 177/4D நிலமானது கணேசன் மகன் தேவராஜன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னடுதான் மேற்படி தேவராஜன் மேற்படி சொத்தினை இந்த மேல்முறையீட்டாளருக்கு கடந்த 24.03.1994–ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளார். அது வா.சா.ஆ 4 ஆகும்.

4. மேற்படி வா.சா.ஆ–3 ஈஸ்ட்மெண்ட் பாத்திய பத்திரத்தில் BC பாதையின் பரப்பளவு 4050 சதுர லிங்ஸ் என்றும், CD பரப்பளவு 8520 சதுர லிங்ஸ் என்று காட்டப்பட்டுள்ளது. மேற்படி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மொத்த விஸ்தீரணம் 8520 சதுர லிங்ஸ் ஆகும். இந்த அளவு செண்ட் கணக்கில் 13–1/2–செண்ட்டாகும். மேற்படி வா.சா.ஆ–3 வாயிலாக சர்வே எண்: 177/4D –யில் 13–1/2–செண்ட் பாதைக்கென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. பின்னிட்டு ஏற்பட்ட பி.சா.ஆ–1 பாகப்பிரிவினை ஆவணத்திலும் வா.சா.ஆ–4 இந்த மேல்முறையீட்டாளரின் கிரைய ஆவணத்திலும் ச.எண்: 177/4D–ல் மொத்த விஸ்தீரணம் ஏக்.1.36 என்றும், இதில் பாதைக்காக 4

செண்ட் போக மீதமுள்ள ஏக்.1.32 நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக ச.எண்: 177/4D ல் மேற்படி ஆவணங்கள் குறிப்பிட்டுள்ள பாதை நீங்கலாக ஏக்.1.32–நிலம் காட்டப்பட்டுள்ளது. ஆக பாதைக்கென்று 4 செண்ட் ஒதுக்கீடு காட்டப்பட்டுள்ளது. ச.எண். 177/4D–ல் B C D பாதை முழுமையாக வாதி வழக்கில் கூறியுள்ளவாறு சென்றால், 13–1/2–செண்ட் நிலம் தேவை. ஆனால் அவ்வாறு அங்கு 13 செண்ட் அளவு கொண்ட BCD ஒழுங்கில் எவ்வித பாதையும் இல்லை. BCD பாதை 4 செண்ட் என்றால் ச.எண்: 177/4D–ல் சுமார் 4 அடி மட்டுமே பாதை அமைக்க முடியும். ஆனால் பூமி அமைப்பில் வாதி தாவாவில் கூறியுள்ள BCD பாதை ஒழுங்கில் 20 அடி அகல பாதையும் இல்லை, 4 அடி அகல பாதையுமில்லை. அதேபோல் பூமியில் வாதி பிராதில் கோரியுள்ளவாறோ, அல்லது பிராது பிளானில் காட்டியுள்ளவாறோ எவ்விதமான பாதையுமில்லை. மேற்படி சங்கதிகளை விசாரணை நீதிமன்றம் ஆராய தவறிவிட்டது.

6. B C D பாதை ஒழுங்கில் வாதி கோரியுள்ளவாறு பாதை இல்லை என்பதை நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்தாலே மிகத் தெளிவாக தெரியவரும். மேலும் வா.சா–1 வாதியானவர் தனது குறுக்கு விசாரணையில் தாவா பாதை வழக்கில் கோரியுள்ள BCD ஒழுங்கில் எவ்வித பாதையுமில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். இதை பொறுத்து விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது. மேலும் மேற்படி நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தை பார்த்தலோ, தாவாவின் உண்மைநிலை மிகத்தெளிவாக தெரியும். ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் BCD பாதை இல்லை என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அதை கவனத்தில் கொள்ளாமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பு செய்துள்ளது தவறானதாகும்.

7. தாவா வாதியின் நிலங்களுக்கும் அதேபோல் இந்த பிரதிவாதிகள் மற்றும் அவரது முன் பாத்தியஸ்தர்களின் இதர குடும்ப உறுப்பினர்களுக்கும் பாத்தியப்பட்ட நிலங்களுக்கும், இந்த பிரதிவாதியின் ச.எண்: 177/4D நிலத்திற்கும் செல்வதற்காக நீண்ட நெடுங்காலமாக ஒரு வண்டிப்பாதை ச.எண்: 178/6D–ல் வடபுறமாக கிழமேல் ஒழுங்கில் செல்கிறது. இந்த

வண்டிப்பாதைதான் மேற்படி நிலங்களுக்கு எல்லாம் சென்று வரக்கூடிய பாதையாகும். இந்த பாதை வருவாய் புல வரைபடத்தில் மிகத் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. இதை பொறுத்து நீதிமன்ற ஆணையரும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மேற்படி பாதையை பொறுத்து இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் ஆவணங்கள் வாயிலாகவும், வாய்மொழி சாட்சியம் மூலமாகவும் நிரூபணம் செய்யப்பட்டு இருப்பதை விசாரணை நீதிமன்றம் அதை பரிசீலனை செய்ய தவறிவிட்டது.

8. வா.சா.ஆ–3 ஈஸ்ட்மெண்ட் பாத்திய பத்திரம் வாதி பெயருக்கு கணேசன் என்பவர் எழுதிக்கொடுக்க தனிப்பட்ட உரிமை எதுவும் இல்லாத சூழ்நிலையில் மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லக்ககூடியதல்ல. மேலும் மேற்படி வா.சா.ஆ.3–ன்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவிதமான பாதையும் ச.எண்: 177/4D–ல் அமைக்கப்படவில்லை. காரணம் மேற்படி ச.எண்: 177/4D என்பது கணேசனை தவிர இன்னும் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் பாத்தியம் இருந்ததால், அந்த பாதையை அமைக்க அனுமதிக்கவில்லை. இதுதான் உண்மை. அதன் பின்னிட்டு ஏற்பட்ட பி.சா.ஆ–1 பாகப்பிரிவினைப் பத்திரத்தில் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட பகுதியில் 4 செண்ட் அளவிற்கு பாதை பாத்தியம் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. அவ்வாறு 4 செண்ட் அளவு என்பது ச.எண்: 177/4D யில் சுமார் 4 அடியும், ஏற்கனவே ச.எண்: 178/6D ல் சென்று கொண்டு இருக்கக்கூடிய பாதையுடன் சேர்ந்து பயன்படுத்திக் கொள்வதற்காக மேற்படி பாதை பாத்தியம் எழுதப்பட்டது. ஆனால் மேற்படி ச.எண்: 178/6D ல் உள்ள பாதையுடன் மேற்படி 4 அடி பாதையை அமைத்து இணைத்துக்கொள்வதற்கு ச.எண்:178/6D–ன் உரிமையாளர் அனுமதிக்காததால் மேற்படி 4 அடி பாதையும் அமைக்கப்படவில்லை. அதன் பின்னிட்டு பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்ட வா.சா.ஆ –4 கிரைய பத்திரத்தில் மேற்படி 4 அடி பாதை என்று குறிப்பிட்டு இருந்தாலும், அவ்வாறு எவ்விதமான பாதையும் ச.எண்: 177/4D–ல் இல்லை. மேற்படி சங்கதிகள் குறித்து பிரதிவாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டும், விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது.

9. ஒரு பாதையை பொறுத்து நீதிமன்றத்தில் பரிகாரம் கோரும் பொழுது அந்த பாதையானது பூமி அமைப்பில் இருக்க வேண்டும். அதில் வழக்கில் கோரியுள்ளவாறு நீள, அகலம் உள்ளது என்பதை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து அத்து காண்பிக்க வேண்டும். அடுத்தப்படியாக அவ்வாறு பூமி அமைப்பில் பாதை இருக்கும் பட்சத்தில் அந்த பாதை யாருடைய நிலத்தில் செல்கின்றது, அந்த நிலத்தின் உரிமையாளர் யார்? அவர் ஏதேனும் பாதை பாத்தியம் கொடுத்துள்ளாரா? அவ்வாறு ஏதேனும் பாதை பாத்தியம் கொடுத்து இருந்தால் அவருக்கு தனிப்பட்ட முறையில் பாதை பாத்தியம் கொடுக்க உரிமை உள்ளதா? அதேபோல் ஆவணத்தில் பாத்தியம் கொடுக்கப்பட்ட உரிமைப்படி பூமி அமைப்பில் பாதை அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். மேற்படி சங்கதிகள் குறித்து இந்த மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தரப்பில் பாதையில்லை என்பதை மிகத் தெளிவாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி சங்கதிகளை குறித்து நிரூபிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் வாதிக்குதான் உண்டு. ஆனால் வாதி தன்னுடைய நிரூபணம் செய்யவில்லை. இந்த அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் வழக்கை டிக்ரி செய்து இருப்பது சரியானவையல்ல. ஆகவே, வாதிக்கு தாவா ABCD பாதை பொறுத்து விளம்புகை பரிகாரமும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை விசாரணை நீதிமன்றம் O.S.No: 111/2016 வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை, இந்த மேல்முறையீட்டின் வாயிலாக ரத்து செய்து, அசல் வழக்கை தள்ளுபடி செய்து இந்த மேல்முறையீடை அனுமதிக்க வேண்டும் என்று, இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. <u>இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்</u> :

1. வாதியின் கிரைய முன்னோருக்கு வா.சா.ஆ.3–Easement பாத்தியப்பத்திரம் எழுதிக்கொடுக்க தனிப்பட்ட உரிமையில்லை என்பதை கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதா?

2. மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள B C D ஒழுங்கில் பாதை நிலவியல் அமைப்பில் இல்லை என்பதையும், மேற்படி பாதை சம்பந்தப்பட்ட ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள அளவுகள்படி மேற்படி பாதை இல்லை என்பதையும் கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதா?
3. வா.சா.ஆ.3–Easement பாத்தியப்பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றும் அதனடிப்படையில் பாதை அமைக்கப்பட வில்லை என்பதை கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதா?
4. வாதிக்கு அவரின் நிலங்களுக்கு செல்ல வேறு பாதை உள்ளது என்பதை கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதா?
5. விசாரணை நீதிமன்றம் வாதிகளின் வழக்கை அனுமதித்து வழங்கியுள்ள தீர்ப்பும், தீர்ப்பாணையும் சரியானதா?
6. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் ரத்து செய்யத்தக்கதா? அவ்வாறெனில் உபயதரப்பினர்களுக்கு கிடைக்க வேண்டிய பரிகாரங்கள் என்ன?

<u>மேல்முறையீட்டாளர்/1, 2–பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதுரையின் சாராம்சம்</u>

10. வாதி தரப்பில் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள A, B, C, D பாதை வழியாக வாதிக்கு பாதை உரிமை கோரி விளம்புகை பரிகாரமும், மேற்படி பாதையில் வாதியின் அனுபவத்தை தடை செய்யக்கூடாது என்றும் உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால், மேற்படி மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள A B பாதையில் பிரச்சனை இல்லை என்றும் ஆனால், வாதி வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4–ஆவணத்தின் அடிப்படையில் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள B C D என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் பாதை உள்ளதாக கூறி, அதில் வாதி பாதை உரிமை கோரியுள்ளார் என்றும் ஆனால், வாதி குறிப்பிட்டுள்ளதுபோல் மேற்படி B C D ஒழுங்கில் எவ்வித பாதையும் இல்லை என்றும் மேற்படி பகுதியில் 20–அடி உயரம் கொண்ட மரங்கள் உள்ளது என்றும் வா.சா.ஆ.3–ஆவணத்தின் மூலம் 13–1/2–செண்ட் விஸ்தீரணம் கொண்ட இடத்தை பாதைக்காக கிரையம் பெற்றதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால், மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி 13/1/2–விஸ்தீரணம் கொண்ட பாதை எதுவும் இல்லை என்றும் பி.சா.ஆ.1–பாகப்பிரிவினை பத்திரத்தில் வா.சா.ஆ.3–ஆவணத்தை எழுதிக்கொடுத்த கணேசன் என்பவரின் மகன் தியாகராஜன் என்பவருக்கு 4–லிங்ஸ் அளவுள்ள இடம் தான் பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால், மேற்படி வா.சா.ஆ.3–ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளின்படியும் பாதை அமைத்துக்கொள்ளவில்லை என்றும் வா.சா.ஆ.4–ஆவணத்தில் பாதைக்காக 4–செண்ட் மட்டுமே தடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் ஆகவே, மேற்கண்ட ஆவணங்களில் பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் முரண்பாடாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள B C D அளவுள்ள பாதை நிலவியல் அமைப்பில் இல்லை என்று நீதிமன்ற ஆணையர் அவரின் அறிக்கை மற்றும் வரைபடத்தில் B C D ஒழுங்கில் பாதை இருப்பதாக குறிப்பிடவில்லை என்றும் ஆகவே, வாதி கூறியுள்ளவாறு B C D ஒழுங்கில் பாதை இல்லாத நிலையில் வாதி பாதையை அமைத்துத்தரக்கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரித்தான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும் அதற்கு மாறாக நிலவியல் அமைப்பில் இல்லாத பாதைக்காக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும் விசாரணை நீதிமன்றம் மேற்கண்ட பரிசீலிக்காமல் வாதி கோரியவாறு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது சரியல்ல என்றும் ஆகவே, இம்மேல்முறையீட்டை அனுமதித்து, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

<u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் வாதுரையின் சாராம்சம்</u>

11. வாதி வழக்குரையுடன் ஒரு மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றும் அதில், வாதிக்கு பாத்தியப்பட்ட இடங்கள் P என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தாவா 2–ம் இலக்கச்சொத்து A B என்றும் தாவா 3–ம் இலக்கச்சொத்து B C என்றும் மேற்படி 3–ம் இலக்கச்சொத்து சர்வே எண்ணில் கீழமேல் உள்ள பாதை C D என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதேபோல், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் D என்றும் ராசம்பாளையத்திலிருந்து, நாமக்கல் வரும் தார்

சாலையிலிருந்து கிழக்கு நோக்கி சென்று பின்பு தெற்கு நோக்கி செல்லும் புறம்போக்கு பாதை R S T என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேற்படி மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள B C D பாதையை பொறுத்து மட்டுமே வாதி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி 2, 3–இலக்கச்சொத்துக்கள் ஆதியில் பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களின் பொதுக்குடும்பத்தலைவரான கணேசன் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டிருந்தது என்றும் மேற்படி கணேசன் என்பவருக்கு தாவா 2, 3–இலக்கச்சொத்தான A B C D பாதையில் Easement பாத்தியத்தை வாதி உரிய மறுபயனுக்கு கடந்த 20.09.1990–தேதியிட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்று, அனுபவம் செய்து வருகிறார் என்றும் அதனால் மேற்படி A B C D பாதையில் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வாதிக்கு பாதை பாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றும் அதேபோல், மேற்படி B C D பாதைப்பகுதி அமைந்துள்ள சர்வே எண். 177/4D நிலத்தினை பிரதிவாதிகள் கடந்த 24.03.1999–தேதியில் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும் மேற்படி B C D பாதையில் முட்கள் முளைத்து போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததை வாதி சரிபடுத்தியபோது, பிரதிவாதிகள் தடுத்து மேற்படி A B C D பாதை பகுதியில் வாதிக்கு உள்ள பாதை உரிமையை தடுத்தார்கள் என்றும் அதனால், மேற்படி பாதை சம்பந்தமாக வாதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் பிரதிவாதிகள் மேற்படி B C D பாதை நிலவியல் அமைப்பில் இல்லை என்றும் கூறியுள்ளது சரியல்ல என்றும் பிரதிவாதிகள் கிரையம் பெற்ற வா.சா.ஆ.4–ஆவணம், பிரதிவாதிகளின் கிரைய முன்னோர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட வா.சா.ஆ.9–பாகப்பிரிவினை பத்திரம் கந்தசாமி வகையறா கொடுத்த கிரைய ஆவணமான வா.சா.ஆ.10–கிரைய ஆவணம் ஆகியவற்றில் தாவா பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதேபோல், B C D இடத்திற்கான வருவாய் ஆவணங்களிலும், பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தில் B C பகுதியில் முட்கள் முளைத்துள்ளதாக கூறியுள்ளார் என்றும் பாதை இல்லை என்று கூறவில்லை என்றும் மேலும் B C பகுதியில் கிழக்கு புறத்தில் M என்ற முட்டுக்கல் உள்ளது என்று கூறியுள்ளார் என்றும் அதனால், மேற்படி பகுதியில் பாதை உள்ளதை நிரூபிக்கும்

வகையில், முட்டுக்கல் இருப்பது தெரிய வருகிறது என்றும் அதேபோல் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையிலும், B C பகுதியில் பாதை இல்லை என்று குறிப்பாக மறுக்கவில்லை என்றும் மேற்படி B C பகுதியில் பாதை இல்லை என்று தற்போது பிரதிவாதிகள் வாதிடுவது ஏற்கத்தக்கதல்ல என்றும் விசாரணை நீதிமன்றம் இரு தரப்பு சாட்சியங்கள், ஆவணங்கள் ஆகியவற்றை சரியாக பரிசீலனை செய்து, வாதி கோரியவாறு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது என்றும் அதனால், அதில் தலையிட வேண்டியதில்லை என்றும் இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

12. இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

<u>மேல்முறையீட்டு வழக்கில் பிரச்சனை 1–க்கான தீர்வு,</u>

1. வாதியின் கிரைய முன்னோருக்கு வா.சா.ஆ.3–Easement பாத்தியப்பத்திரம் எழுதிக்கொடுக்க தனிப்பட்ட உரிமையில்லை என்பதை கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதா?

13. வாதி தரப்பில் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடமான வா.சா.ஆ.8–ல் R S T என்று குறிப்பிட்டுள்ள புறம்போக்கு பாதை வழியாக வந்து, பின்னர், A B என்ற பாதையில் வந்து பின்னர் B C D என்ற பாதையின் வழியாக சென்று அவரின் P என்று குறிப்பிட்டுள்ள அவரின் சொத்துக்களுக்கு சென்று, அனுபவித்து வருவதாகவும் மேற்படி A B C D என்ற பாதையில் Easement பாத்திய உரிமையை வாதி கடந்த 20.09.1990–தேதியிட்ட Easement பாத்திய கிரைய ஆவணத்தை பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களின் பொதுக்குடும்ப தலைவரான கணேசன் என்பவரிடமிருந்து பெற்று, அனுபவம் செய்து வருவதாகவும், தற்போது A B என்று குறிப்பிட்டுள்ள பாதையில் பிரச்சனை இல்லை என்றும் ஆனால், B C D என்று குறிப்பிட்டுள்ள பாதையில் வாதியின் தடபாத்திய உரிமையை பிரதிவாதிகள் தடை செய்வதாக வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி B

C D என்ற பகுதியில் பூமி அமைப்பில் தடம் எதுவும் இல்லை என்றும் மேற்படி பாதை சம்பந்தமான ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்படி பாதையின் விஸ்தீரணம் இல்லை என்றும் வாதி பெற்றுள்ள வா.சா.ஆ.3–Easement பாக பாத்தியபத்திரத்தை எழுதிக்கொடுக்க அவரின் கிரைய முன்னோரான கணேசன் என்பவருக்கு உரிமையில்லை என்றும் மேற்படி ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றும் மேற்படி ஆவணத்தின்படி பாதை அமைக்கப்படவில்லை என்றும் வாதியின் நிலங்களுக்கு சென்று வர அவருக்கு வேறு பாதை உள்ளது என்றும் ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி இரு தரப்பு சங்கதிகளையும் பரிசீலிக்கையில், வாதி கூறியுள்ளவாறு மேற்படி B C D பகுதியில் பூமி அமைப்பில் பாதை உள்ளதா என்பதையும் மேற்படி பாதை சம்பந்தமான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளபடி பாதையின் விஸ்தீரணம் உள்ளதா என்பதையும் வா.சா.ஆ.3–Easement பாக பாத்திய பத்திரம் நடைமுறைக்கு வந்து அதனடிப்படையில் பாதை அமைக்கப்பட்டதா என்பதையும் வாதிக்கு அவரின் நிலங்களுக்கு செல்ல வேறு பாதை உள்ளது என்பது சரியா என்பதையும் இவ்வழக்கில் முக்கியமாக பரிசீலிக்க வேண்டியுள்ளது.

14. வா.சா.ஆ.3–Easement பாகப்பத்திரத்தை எழுதிக்கொடுத்த கணேசன் என்பவருக்கு மேற்படி ஆவணத்தை எழுதிக்கொடுக்க தனிப்பட்ட உரிமை எதுவும் இல்லை என்றும் மேற்படி ஆவணம் எழுதப்பட்டபோது கணேசன் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும் அதனால், மேற்படி கணேசன் மட்டும் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.3–ஆவணத்தின் அடிப்படையில், வாதி B C D ஒழுங்கில் தடபாத்திய உரிமை கோருவது சரியல்ல என்றும் வாதிடப்பட்டது. மேற்படி வாதத்தை பரிசீலிக்கையில், வா.சா.ஆ.3–Easement பாக பாத்தியப்பத்திரம் கடந்த 20.09.1990–தேதியில் ஏற்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் ஏற்பட்டுள்ளதை பிரதிவாதிகளின் கிரைய முன்னோரின் குடும்பத்தினரோ அல்லது பிரதிவாதிகளோ இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஆட்சேபணை செய்ததாக கூறி, ஆதாரங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி கணேசன் குடும்பத்தில் கடந்த 26.12.1991–தேதியில் தான் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றும் அதனால், மேற்படி வா.சா.ஆ.3–ஆவணத்தை எழுதிக்கொடுக்க மேற்படி

கணேசனுக்கு தனிப்பட்ட உரிமையில்லை என்று ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மேற்படி ஆட்சேபணையை பார்க்கும்போது, மேற்படி கணேசன் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படாததால், வா.சா.ஆ–3–ஆவணம் ஏற்படும்போது, கணேசனுக்கு மேற்படி சொத்தில் கூட்டு உரிமை உள்ளதால், மேற்படி ஆவணம் எழுதிக்கொடுக்க அவருக்கு தனிப்பட்ட உரிமையில்லை என்று பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்துள்ளது தெரிய வருகிறது. எனவே, வா.சா.ஆ.3–ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தில் மேற்படி கணேசனுக்கு கூட்டு உரிமை உள்ளதை பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இந்நிலையில், பொதுக்குடும்ப சொத்தின் ஒரு கூட்டு உரிமையாளர் அவரின் பாகத்தைப்பொறுத்து கிரையம் கொடுக்க சட்டப்படி அவருக்கு உரிமையுள்ளது. எனவே, பொது குடும்பச்சொத்து பாகம் பிரியாத நிலையில், கூட்டு உரிமையாளர் ஒருவர் அவரின் பாக சொத்தை கிரையம் கொடுத்துள்ளதால், அந்த கிரையம் சட்டப்படி செல்லாது என்று கூறமுடியாது. அதனடிப்படையில் பார்க்கும்போது, வாதியின் கிரைய முன்னோரான கணேசன் வா.சா.ஆ.3–ஆவணத்தின் மூலம் பாகம் பிரியாத பொதுக்குடும்ப சொத்தில் அவரின் பாகத்தின் ஒரு பகுதியைப்பொறுத்து வாதிக்கு வா.சா.ஆ.3–Easement பாத்தியப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். அதனால், மேற்படி ஆவணம் ஏற்பட்டபோது, கணேசன் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்பதனடிப்படையில் மட்டும் மேற்படி வா.சா.ஆ.3–ஆவணம் செல்லாது என்று கூறமுடியாது. ஆகவே, வா.சா.ஆ.3–ஆவணத்தை எழுதிக்கொடுக்க மேற்படி கணேசனுக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்பதை கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்று பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்வது ஏற்கத்தக்கதல்ல என்று பிரச்சனை 1–ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>பிரச்சனை 2, 3–ற்கான தீர்வு,</u>

2. மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள B C D ஒழுங்கில் பாதை நிலவியல் அமைப்பில் இல்லை என்பதையும், மேற்படி பாதை சம்பந்தப்பட்ட ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள அளவுகள்படி மேற்படி பாதை இல்லை என்பதையும் கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதா?

3. வா.சா.ஆ.3–Easement பாத்தியப்பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்றும் அதனடிப்படையில் பாதை அமைக்கப்பட வில்லை என்பதை கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதா?

15. வாதியின் வா.சா.ஆ.8– மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள B C D என்ற இடத்தில் பாதை பூமி அமைப்பில் உள்ளதா? மேற்படி பாதை சம்பந்தமான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி பாதையின் விஸ்தீரணம் உள்ளதா? மேற்படி பாதை சம்பந்தமான வா.சா.ஆ.3–ஆவணம் நடைமுறைக்கு வந்து, அதனடிப்படையில் மேற்படி பாதை அமைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலிக்கையில், பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள நீ.ம.சா.ஆ1 மற்றும் 2–ல் B C D ஒழுங்கில் பாதை இல்லை என்று கூறியுள்ளார் என்றும் வாதியின் வா.சா.ஆ.3–Easement பாத்தியப்பத்திரத்தில் மேற்படி B C D பாதையின் சர்வே எண்ணான 174/4D–ல் 13–1/2–சென்ட் பாதையின் விஸ்தீரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால், பிரதிவாதிகளின் கிரைய முன்னோர் குடும்பத்தில் ஏற்பட்ட பி.சா.ஆ.1–ஆவணத்திலும், பிரதிவாதிகளின் வா.சா.ஆ.4–கிரைய ஆவணத்திலும் மேற்படி சர்வே எண். 177/4D–ல் மொத்த விஸ்தீரணம் ஏக்.1.36–ல், பாதைக்காக 4–செண்ட் போக மீதி ஏக். 1.32–நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால், மேற்படி ஆவணங்களில் பாதைக்காக 4–செண்ட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால், வா.சா.ஆ. 3–ஆவணத்தின்படி 13–1/2–செண்ட் B C D பாதை இல்லை என்பது தெரிய வருகிறது என்றும் வாதிடப்பட்டது.

16. மேற்படி வாதத்தை பரிசீலிக்கையில், வாதியின் கிரைய முன்னோரான மேற்படி கணேசன் அவரின் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு முன்பே, வா.சா.ஆ.3–ஆவணத்தின் மூலம் 13–1/2–சென்டை பொறுத்து A B C D பாதையில் Easement பாத்தியப்பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி வா.சா.3–ஆவணம் கடந்த 20.09.1990–தேதியில் ஏற்பட்ட பிறகு தான் மேற்படி கணேசன் குடும்பத்தில் பி.சா.ஆ. 1–பாகப்பிரிவினை பத்திரம் கடந்த 26.12.1996–தேதியில் ஏற்பட்டுள்ளது. ஆகவே, வா.சா.ஆ.3–ஆவணம் தான் பி.சா.ஆ.1–ஆவணத்திற்கு முந்தைய ஆவணமாகும். மேற்படி கணேசன் பி.சா.ஆ.1–ஆவணம் ஏற்படுவதற்கு

முன்பே வா.சா.ஆ.3–ஆவணத்தின் மூலம் 13–1/2–செண்டை பொறுத்து A B C D பாதையில் Easement பாத்தியப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். இந்நிலையில், மேற்படி ஆவணத்திற்கு பின்னர் ஏற்பட்ட பி.சா.ஆ–1–ஆவணத்தில் மேற்படி 13–1/2–செண்டை பொறுத்து மீண்டும் பாகம் பிரித்துக்கொள்வதற்கு கணேசன் குடும்பத்திற்கு உரிமையில்லை. மேற்படி 13–1/2–சென்டைப்பொறுத்து கணேசன் ஏற்கனவே வா.சா.ஆ.3–ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளதால், பி.சா.ஆ.1–ஆவணத்தின் மூலம் பாகம் பிரிக்கும்போது, மேற்படி 13–1/2–செண்டை கணேசனுக்கு ஒதுக்கப்படும் பாகத்திலிருந்து கழித்து, மீதி விஸ்தீரணத்தை அவருக்கு ஒதுக்கி, மேற்படி பி.சா.ஆ.1–பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அதற்கு மாறாக வா.சா.ஆ.3–ஆவணம் மூலம் A B C D பாதைக்காக 13–1/12–செண்டை பொறுத்து எழுதிக்கொடுத்துவிட்டு அதற்கு பின்னர் ஏற்பட்ட பி,.சா.ஆ.1–ஆவணத்தில் 4–செண்ட் அவறிக்குத்தான் பாதை பாத்தியம் குறிப்பிட்டு எழுதப்பட்டது என்றும் அதனால், வா.சா.ஆ.3–ஆவணத்தில்குறிப்பிட்டுள்ளபடி A B C D பாதை 13–1/2–செண்ட் விஸ்தீரணம் இல்லை என்றும் பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்வது ஏற்கத்தக்கதாக இல்லை.

17. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தில் B C பகுதியில் சிவப்பு கலரிட்ட தடப்பகுதி போக, மீதமுள்ள B C பகுதி முழுவதும் அதனை ஒட்டிய B C தாவா இடத்தின் மேற்கு பகுதியில் உள்ள 3–ம் நபரின் காலி இடம் முழுவதும் நன்கு படர்ந்த சுமார் 10–அடி உயரம் வரை அடர்ந்த சீத்த கருவேல மரங்கள் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தில் மேற்படி A B C D என்ற பாதையின் அளவுகள் எதுவும் குறிப்பிடவில்லை. அதனால், நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தின் மூலம் மேற்படி A B C D என்ற பாதையின் நீள, அகலத்தை அறிந்து கொள்ள இயலவில்லை. ஆனால், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி A B C D பாதை வா.சா.ஆ.3–ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி 13–1/2–சென்ட் அளவு இல்லை என்று கூறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தின் மூலம் மேற்படி A B C D பாதையின் நீள, அகலத்தை அறிந்து கொள்ள இயலாத நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி பாதையின் அகலம் பூமி

அமைப்பில் 13–1/2–சென்ட் விஸ்தீரணம் இல்லை என்பதை உரிய சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபித்திருக்கவேண்டும். மேலும், நீதிமன்ற ஆணையர் தாவா பாதையின் பூமி அமைப்பை பொறுத்து மட்டுமே அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ள நிலையில், மேற்படி பாதையின் விஸ்தீரணத்தை அளந்து, அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்பதற்கு பிரதிவாதிகள் தரப்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஆகவே, பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி A B C D பாதையின் விஸ்தீரணம் வா.சா.ஆ.3–ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி 13–1/2–சென்ட் இல்லை என்று ஆட்சேபணை செய்துள்ளதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் மேற்கண்டவாறு B C பகுதியில் 10–அடி உயரமுள்ள சீத்த கருவேல மரங்கள் இருந்ததாக மட்டும் கூறியுள்ளார். ஆனால், அந்த மரங்கள் இருந்த பகுதி நிலமாக இருந்ததா? அல்லது பாதையாக இருந்ததற்கு தடயங்கள் இருந்ததா? என்பது குறித்து விவரம் எதுவும் குறிப்பிடவில்லை. வாதியும் அவரின் வழக்குரையில் மேற்படி B C பகுதியில் முட்கள் முளைத்து போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததை சரிசெய்தபோது, பிரதிவாதிகள் தடுத்துவிட்டதாக கூறியுள்ளார். ஆகவே, மேற்கண்ட விவரங்களை பார்க்கும்போது, B C பகுதியில் 10–உயரமுள்ள சீத்த கருவேல மரங்கள் இருந்ததாக மட்டும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் கூறியுள்ளதால் அந்த பகுதியில் அதற்கு முன்பு பாதையே இல்லை என்று முடிவு செய்ய இயலாது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தில் C D பகுதி முழுவதும் பாதை இல்லை என்று குறிப்பாக சொல்லவில்லை. மேலும், B C பகுதியின் கிழக்கு மற்றும் மேற்கு புறத்தில் M என்ற முட்டுக்கற்கள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி M என்ற முட்டுக்கற்கள் B என்ற இடத்திலிருந்து D என்ற இடம் வரை இருபுறத்திலும் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆகவே, மேற்படி M என்ற முட்டுக்கற்கள் B C D என்ற இடத்தின் இரு புறத்திலும் இருப்பதை பார்க்கும்போது, அந்த M என்ற முட்டுக்கற்கள் வா.சா.ஆ.3–ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள B C D பாதையின் அத்துக்கற்கள் என்பது தெரிய வருகிறது. மேலும், மேற்படி B C பகுதியில் பாதை இருந்ததாக பிரதிவாதிகளின் வா.சா.ஆ.4–கிரைய ஆவணம் பிரதிவாதிகளின் கிரைய முன்னோர்களின்

குடும்பத்தில் ஏற்படுத்திக்கொண்ட பி.சா.ஆ.1–பாகப்பிரிவினை ஆவணம் நடேசன் என்பவர் பெற்ற வா.சா.ஆ.10–கிரைய ஆவணம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி நீதிமன்ற அறிக்கை மற்றும் வரைபடத்தில் B C பகுதியில் சீத்த கருவேல மரங்கள் இருந்தாக குறிப்பிட்டிருந்தார் என்பதனடிப்படையில் மேற்படி B C பகுதி பாதை இல்லை என்றும் வா.சா.ஆ.3–ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றும் அதன்படி பாதை அமைக்கப்படவில்லை என்றும் அதனால், B C D பாதை பூமி அமைப்பில் இல்லாததால் வாதி, செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யாமல், நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள சரியல்ல என்று பிரதிவாதிகள் வாதிடுவது ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும், மேற்படி விவரங்களை பரிசீலிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்றும் பிரதிவாதிகள் வாதிடுவது ஏற்கத்தக்கதல்ல பிரச்சனை 2, 3–ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>பிரச்சனை 4–ற்கான தீர்வு,</u>

4. வாதிக்கு அவரின் நிலங்களுக்கு செல்ல வேறு பாதை உள்ளது என்பதை கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதா?

19. பிரதிவாதிகள் தரப்பில், வாதியின் நிலத்திற்கும், பிரதிவாதிகளின் சர்வே எண்.177/4D மற்றும் பிரதிவாதிகளின் கிரைய முன்பாத்தியஸ்தர்களின் நிலங்களுக்கும் சென்று வருவதற்கு நீண்ட காலமாக சர்வே எண். 178/6D–ல் வடபுறமாக கீழமேல் ஒழுங்கில் செல்லும் வண்டிப்பாதையைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும் மேற்படி பாதையை குறித்து நீதிமன்ற ஆணையரும் அவரின் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றும் மேற்படி பாதை குறித்து பிரதிவாதிகள் நிரூபித்தும் அதை பரிசீலனை செய்யாமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்று வாதிடப்பட்டது. மேற்படி வாதத்தை பரிசீலிக்கையில், வாதி இவ்வழக்கை வா.சா.ஆ.3–Easement பாத்திய பத்திரத்தின் அடிப்படையில் தாவா A B C D பாதையில் உரிமை இருப்பதாக அவரின் வழக்குரை பாரா 3–ல் குறிப்பிட்டுள்ளார். மேலும், மேற்படி விவரங்களை குறிப்பிட்டு தான் வாதி அவரின் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு மேற்படி பாதையை உரிமை கோரியுள்ளார். ஆகவே, வாதி வா.சா.ஆ.3–

Easement பாத்திய பத்திரத்தின் அடிப்படையில் மேற்படி A B C D பாதையில் (Easement by grant) உரிமை கோருகிறார் என்பது தெரிய வருகிறது. ஆனால், வாதி மேற்படி பாதையை சட்ட காலத்திற்கும் மேல் அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி பாதையைத்தவிர வாதியின் P சொத்தை அனுபவம் செய்வதற்கு வேறு பாதை இல்லை என்றும் கூறி, மேற்படி பாதையில் வாதிக்கு நீடனுபவ பாத்திய உரிமை (Easement right by prescription) உள்ளதாக உரிமை கோரவில்லை. ஆகவே, வாதிக்கு தாவா A B C D பாதையில் வா.சா.ஆ.3–Easement பாத்திய பத்திரத்தின்படி (Easement by grant) உரிமையுள்ளது. எனவே, வாதிக்கு உரிமையுள்ள மேற்படி பாதையை பயன்படுத்த அவருக்கு உரிமையில்லை என்றும் அதனால், மேற்படி பாதையைத்தவிர வாதிக்கு அவரின் P சொத்துக்களை அனுபவம் செய்து வருவதற்கு வேறு பாதை உள்ளது என்றும் அதனால், தாவா பாதையில் வாதி உரிமை கோரமுடியாது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்வது ஏற்கத்தக்கதாக இல்லை. எனவே, வாதிக்கு அவரின் P சொத்தை அனுபவம் செய்வதற்கு வேறு பாதை உள்ளது என்பதை பிரதிவாதிகள் நிரூபித்தும், அதை கவனிக்காமல் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்துள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை என்று பிரச்சனை 4–ற்கு தீர்வு காணப்படுகிறது.

<u>பிரச்சனை 5, 6–ற்கான தீர்வு,</u>

5. விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கை அனுமதித்து வழங்கியுள்ள தீர்ப்பும், தீர்ப்பாணையும் சரியானதா?
6. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும், தீர்ப்பாணையும் ரத்து செய்யத்தக்கதா? அவ்வாறெனில் உபயதரப்பினர்களுக்கு கிடைக்க வேண்டிய பரிகாரங்கள் என்ன?

20. பிரச்சனை 1 முதல் 4–ல், விசாரணை நீதிமன்றம், தாவா B C D பகுதியில் பாதை பூமி அமைப்பில் இல்லை என்பதையும் மேற்படி பாதை சம்பந்தமான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள விஸ்தீரணத்தின்படி மேற்படி பாதை இல்லை என்பதையும் வா.சா.ஆ.3–ஆவணத்தை எழுதிக்கொடுக்க வாதியின் கிரைய முன்னோருக்கு தனிப்பட்ட முறையில் உரிமை இல்லை என்பதையும் மேற்படி

ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்பதையும் மேற்படி ஆவணத்தின்படி பாதை அமைக்கப்படவில்லை என்பதையும் கவனிக்காமல் தீர்ப்பளித்துள்ளது என்ற பிரதிவாதிகளின் வாதம் ஏற்கத்தக்கதல்ல என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனால், தாவா பாதை குறித்து வாதி கோரியவாறு விசாரணை நீதிமன்றம் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணை வழங்கியுள்ளது சரியானது என்றும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யத்தக்கதல்ல என்றும் இம்மேல்முறையீடு அனுமதிக்கத் தக்கதல்ல என்றும் பிரச்சனை 5 மற்றும் 6–ற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக,

1) இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) பரமத்தி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாதி தாக்கல் செய்த அசல் வழக்குஎண். 111/2016–வழக்கை கடந்த 17.07.2023–தேதியன்று அனுமதித்து, பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்படுகிறது.

3) செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் 2026– ஆம் ஜூலை மாதம் 06–ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR Date: 2026.07.06 12:28:47 +0530

சார்பு நீதிபதி,

பரமத்தி.

இரு தரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்

இல்லை.

S NALINAKUMAR Digitally signed by S NALINAKUMAR Date: 2026.07.06 12:28:52 +0530

சார்பு நீதிபதி,

பரமத்தி.